# ● இந்திய - பாக். எல்லையில் தொடர்ந்து மோதல்


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 13 | இதழ் 199
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 29-8-1991


## 50 படையினர் பலி

(புதுடில்லி)

காஷ்மீர் எல்லைப்புறத்தில் இந்திய-பாகிஸ்தான் படைகளிடையே கடும் சண்டை இடம்பெற்றுவருகிறது நேற்று 3-ம் நாள் நடைபெற்ற சண்டையில் இரு தரப்பிலுமாக 32 படையினர் கொல்லப்பட்டனர்.

23 பாகிஸ்தானிய துருப்புக்களும், 9 இந்திய சிப்பாய்

(3ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்குதல் 4 இராணுவம் பலி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள திருமலை-கந்தளாய் பிரதான வீதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்றுக் காலை விடுதலைப்புலிகள்பதுங்கியிருந்து திடீர்த்தாக்குதலை நடத்தியதில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பல ஆயுதங்களும் விடு

(4ம் பக்கம் பார்க்க)

# இனப் பிரச்னைக்கு சமாதான தீர்வைக் கோரி

# பல கட்சிகளும் வற்புறுத்தல்!

(கொழும்பு)

**இனப்பிரச்னைக்கு சமாதான முறையில் தீர்வொன்றைக்காண முயற்சிக்குமாறு பல கட்சிகள் அரசதரப்பை கோரிவருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. எதிர்க்கட்சிகளும் இக்கோரிக்கையை வற்புறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

கடந்த வாரம் பாராளுமன்றத்திலும் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் பல கட்சிகள் ஜனாதிபதியை கடித மூலமும் கோரியுள்ளன.

இதேவேளை இனப்பிரச்னைத் தீர்வுக்கு அரசு முன்வைக்கவுள்ள யோசனையை பகிரங்கப்படுத்தவேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மீண்டும்கோரியுள்ளது. எனினும் எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு குறித்து தெரிவிக்குமாறு அரசு தரப்பு எதிர்க்கட்சிகளுக்குகோரிக்கை விடுத்துள்ளது.

பிரச்னைக்கு ஆக்கபூர்வமான தீர்வு ஒன்றைக் காண முயற்சிக்குமாறு லங்கா சமசமாஜக் கட்சியும், நவசமசமாஜக் கட்சியும் தமிழர் கூட்டணியும் கோரியுள்ளன.

கிழக்கில் முஸ்லிம் மாகாணம் ஒன்றை அமைத்து, பிரச்னையைத் தீர்க்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் கோரியுள்ளது.

இதேவேளை, தமிழ் மக்கள்

[3-ம் பக்கம் பார்க்க]

## வல்வை கடலில் பீரங்கித் தாக்குதல்

(வடமராட்சி)

வல்வைக் கடலில் தரித்து நின்ற கடற்படையினர் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை அதிகாலை 5-45 மணியளவில் வல்வை பெருங்கடலில் தரித்து நின்ற இரு கடற்படைக் கப்பல்கள் மக்கள் குடியிருப்புகளை நோக்கி ஆட்லறி ஷெல்தாக்குதலை நடாத்தின

இதேவேளை பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு 11-45 மணியளவில் வல்வைப் பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல்தாக்

(3ம் பக்கம் பார்க்க)

## வெளிவாரி பட்ட பரீட்சை முடிவுகள்

(ஒட்டுசுட்டான்)

வெளிவாரி பட்டப்படிப்பு 1989 - 90 ஆம் கல்வி ஆண்டிற்கான பெறுபேறுகள் நேற்று வெளிவந்துள்ளன.

சகல பரீட்சார்த்திகளுக்குமான பெறுபேறுகளும் பேராதனை வெளிவாரி பல்கலைக்கழக பரீட்சை பதிவாளரால் கடந்த முதலாம் திகதி அனுப்பப்பட்ட பரீட்சை முடிவுகள் யாழ். நகரில் நேற்று தபால் மூலம் விநியோகிக்கப்பட்டன. (144)

## கைதிகளின் நலனுக்காக நால்வர் கொண்ட குழு

(கொழும்பு)

நீதிமன்ற விசாரணைகள் இன்றி வருடக்கணக்காக சிறைகளில் வாடும் கைதிகளின் நலன்கள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து ஆராய நால்வர் கொண்ட குழு ஒன்று ஜனாதிபதி பிரேமதாசாவினால் நியமிக்கப்பட்டுள்ளது.

மூன்று வருடங்கள் செயலாற்

(3-ம் பக்கம் பார்க்க)

## சுவிஸிலிருந்து 3 தமிழர் நாடு கடத்தப்படுவர்

(ஜெனிவா)

சுவிஸ்ஸர்லாந்தில் 3 இலங்கைத் தமிழர்களை கத்தியால் குத்தி படுகாயப்படுத்தியதாக 3 இலங்கைத் தமிழர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர்.

கத்திக்குத்துக்கு இலக்கான மேற்படி 3 தமிழர்களும் சுவிஸ்ஸர்லாந்திலிருந்து வெளியேற்றப்படவிருந்தவர்களாம்.

கத்தியால் குத்தியவர்கள் மூவரும் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளனராம். (சி)

## ஆளும் ஐ. தே. கட்சி விரைவில் உடையும்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சி விரைவில் உடைந்து பல பிரிவுகளாகி விடும் என சுதந்திரக்கட்சி எம்.பி திரு.டி எம். ஜயரத்ன பாராளுமன்றில்கடந்த வாரம் தெரிவித்தார்

சோவியத்தில் கொர்பச்சேவ் கவிழ்க்கப்படும் வரை யாருக்கும் அதுபற்றி தெரியாது. பாகிஸ்தானில் ஸியாவுல் ஹக் கொல்லப்படும் வரை யாரும் அப்படி நடக்கும் என நினைக்கவில்லை. பங்களாதேஷில்எர்ஷாத்துக்கு நடந்ததும் ஓர் உதாரணமே இதுபோல் எங்கும் எதுவும் நடக்கலாம் என்றார். (சி)

## இலங்கைப் படைகளிடையே உள்வீட்டுப் பிரச்னை ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையில் சகல படைப் பிரிவுகளுக்குமிடையே உள்வீட்டுப் பிரச்னை ஆரம்பித்திருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

பொலிஸ், இராணுவம், கடற்படை, விமானப் படையினரிடையே உருவாகியுள்ள இப்பிரச்னை விஸ்வரூபம் எடுப்பதை தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாம்.

[3-ம் பக்கம் பார்க்க]

## புலிகளுக்கு எதிராக உளவுப்பிரிவு

(சென்னை)

விடுதலைப் புலிகளினதும் அவர்களது ஆதரவாளர்களினதும் நடவடிக்கை குறித்து கண்காணிக்க தென் இந்திய மாநிலங்களில் உளவுப்பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இவ் உளவுப்பிரிவு தமிழகம்,

(3ம் பக்கம் பார்க்க)

## புகைக் கூண்டை நோக்கி கடற்படை தாக்குதல்

(வடமராட்சி)

வல்வைப்பகுதி வானில் பறந்து கொண்டிருந்த புகைக்கூண்டை நோக்கி கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கடந்த செவ்வாய் இரவு 7-45 மணியளவில் வல்வை நெடியகாட்டுப் பிள்ளையாரின் வருடாந்த பூங்காவன திருவிழாவின் போது

[3-ம் பக்கம் பார்க்க]

## மனித உரிமை மீறலை கண்டித்து பெல்ஜியத்தில் ஊர்வலம்

(பிறசெல்ஸ்)

இலங்கையில் இடம் பெற்று வரும் மனித உரிமை மீறல்களை கண்டித்து பெல்ஜியத்தில் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றும் புகைப்பட கண்காட்சியும் இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதியிலும், தெற்கிலும் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல் சம்பவங்களைக்கொண்ட பல பெரிய புகைப்படங்களைதாங்கிய வண்ணம் நூற்றுக்கணக்கான பெல்ஜியம் நாட்டவர் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பெருமளவினர் முகமூடிகளை அணிந்து தமது எதிர்ப்பை தெரிவித்தனர். இவ்ஊர்வலம்

[4-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (ஏ-1531)

ஜாம், சோஸ் போத்தல்கள் (Jam Sauce Bottles) விலை ரூ. 3/-க்கு குறையாமல் கிழமை நாட்களில் காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை பின்வரும் முகவரியில் கொள்வனவு செய்யப்படும். Taste line Industries (PVT) Ltd., No: 14. சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். தட்டாதெருச் சந்தியிலிருந்து அரசடி வீதியால் நல்லூர் நோக்கிச் செல்லும்போது இடதுபக்கம் வரும் முதல் ஒழுங்கை. [சி- 5165]

### வாங்க / விற்கப்படும்

பழையபுத்தகங்கள், கொப்பிகள், சஞ்சிகை, போத்தல் வகைகள், உர, கோழித்தீன், சீமெந்து உறைகள், வெற்றுத் தகரங்கள் வாங்கப்படும். விற்கப்படும். சோ. சேனாதிராசா, முகாமையாளர், இராமநாதன் பழைய புத்தகசாலை, 108, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி-5168)

### விற்பனைக்கு

விண்ணப்பபடிவம் - கிராம அலுவலர் பதவிக்கான அச்சிட்ட படிவம் விற்பனையாகிறது. நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். [சி-5222]

### விற்பனையாகிறது

22-8-91 செவ்வாய் மாற்றம். சோபிதா, 363, கே கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம். நூல் ஆசிரியர் Prof:- சத்தியதாஸன். (சி-5221)

### புதிய நாவல்கள்

இன்றைய போராட்டத்தின் ஆரம்ப கால நிலையைச் சொல்லும் நாவல்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை, "ஆறுகள் பின்னோக்கிப் பாய்வதில்லை" (கே.ஆர்- டேவிட்) விற்பனையாகின்றது. பத்திரிகைகளில் தொடராக வெளி வந்தபோது வாசகர்களின் வரவேற்பைப் பெற்றவை. (சி-5210)

### (ஆண்டு 5, 4)

ஆண்டு 5 குறிப் புலமைப் பரிசில்/அனுமதிப் பரீட்சைக் கேற்ப வகுப்புகள் வருடா வருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் எமது நிறுவனத்தால் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. தூர இட மாணவர்களுக்கு சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் பிரத்தியேக வகுப்பு நடைபெறும். ஆண்டு 4 மாணவர்களுக்கும் விஷேட மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பமாயுள்ளன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி-5214]

### விண்ணப்பப் படிவம்

பயிலுநர் ஆசிரியர் கலாசாலைக்கான படிவம், விளையாட்டுத்துறை அதிகாரிகளுக்கான படிவம், ஆசிரியர் இடமாற்றப் படிவம் விற்பனையாகிறது. கடை திறந்திருக்கும் நேரம் காலை 6—9, மாலை 1.30 — 5.00 நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். (சி-5215)

### தேவை

பெண் நோயாளியை வைத்துப் பராமரிப்பதற்குப் பார்வையாளர் தேவை. [சாதி விரும்பத்தக்கது. தங்குமிடம் உணவு வசதி செய்து கொடுக்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக்கொள்ளலாம். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. (சி-5220). C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி-5220]

---

வடபகுதிக்கான

## மருத்துவ பொருள்கள் படையினருக்கு உபயோகம்

(மாங்குளம்)

வடபகுதிக்கான மருத்துவப் பொருள்கள் ஆனையிறவில் காயமடைந்த இராணுவத்தினருக்கு கொழும்பில் உபயோகிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

வடபகுதித் தொண்டர் நிறுவனமொன்றிற்கு பிரிட்டனிலிருந்து அனுப்பப்பட்ட அத்தியாவசிய மருத்துவப் பொருள்கள் காயமடைந்த இராணுவத்தினரின் உபயோகத்திற்காக கொழும்பு மருத்துவ களஞ்சியங்களில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (150)

---

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
25-02-1923

மறைவு:
23-08-1986

திதி:
29-08-1991

### அமரர் கந்தையா இரத்தினகோபால்

அவர்கள்

(Ex-Supdt. of Arsleena Estate, Ginikathena
C. E. O. Milk White)


எம் அன்புத் தெய்வமே!
உங்கள் பூதவுடல் அழிந்தாலும் வஞ்சமில்லா பூ முகமும், கள்ளமில்லா வெள்ளை உள்ளமும் என்றென்றும் எம் இதயத்தை விட்டகலா.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகிறோம்.
ஓம் சாந்தி!

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

"லக்சுமி வாசம்",
527, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம். [சி-5198]

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை லிங்கம்

(பாலசுப்பிரமணியம் சந்திரலிங்கம்)

(பருத்தித்துறை)

வீரஜனனம்: 29- 05- 1969
வீரமரணம்: 29- 08- 1989

விடுதலைத் தொட்டிலில் விளையாடிய குழந்தை
வீரத்துணிவுடன் வீழ்ந்துவிட்டாய் செம்மண்ணில்
விலைகொடுத்து வாங்கிடுவோம் உன்உயிரை
விதியே நீ சொல் விலை என்னவென்று?
உயிர் கொடுத்த உத்தமனே.
உனைப்பிரிந்து தவிக்கின்றோம்.
வீரகாவியம் படைத்தவீரலிங்கமே
நீ மறைந்துவிட்டாலும்
உனது நினைவலைகள் என்றென்றும்
எம் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும்
தமிழீழம் பிறக்கும் உன்
வரலாறு நிலைக்கும்.

மறவாமல் மனமுருகும்!
பெற்றோர், சகோதரிகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

சந்திரலிங்கம் வீதி,
பருத்தித்துறை. (எ-1536)

---

வலிகாமம் வடக்கு

புனர்வாழ்வுக் கழகம்

## கிராமிய குழுக்கள் அமைத்தல்

வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பாதிப்புற்ற மக்கள் நலன்கருதி அமைக்கப்பட்ட மேற்படி கழகத்தின் கிராமிய குழுக்கள் ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவுக்கும் அமைக்கப்படவிருக்கிறது. குறித்த கிராமசேவையாளர் பிரிவு மக்கள் அனைவரும் இக்கிராமிய குழுக்கள் அமைக்க குறித்த இடங்களுக்கு சமூகம் தந்து ஒத்துழைப்பு நல்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

காலம்: 31-08-91 சனிக்கிழமை காலை 9.00 மணி
இடம்: மல்லாகம் மகா வித்தியாலயம்

கி. சே. பிரிவுகள்

| பெயர் | இல: |
|---|---|
| மல்லாகம் தெற்கு | 212 |
| மல்லாகம் மத்தி | 213 |
| மல்லாகம் வடக்கு | 214 |
| பளை வீமன்காமம் வடக்கு | 236 |
| பளை வீமன்காமம் தெற்கு | 237 |
| தெல்லிப்பளை கிழக்கு | 227 |
| தெல்லிப்பளை | 228 |
| துர்க்காபுரம் | 229 |
| தந்தை செல்வாபுரம் | 230 |
| மயிலிட்டி வடக்கு | 246 |

காலம்: 01-09-91 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி
இடம்: மருதனுமடம் இராமநாதன் கல்லூரி

கி. சே. பிரிவுகள்

| பெயர் | இல: |
|---|---|
| காங்கேசன்துறை மேற்கு | 233 |
| காங்கே சன்துறை மத்தி | 234 |
| காங்கேசனதுறை தெற்கு | 235 |
| கட்டுவன் | 238 |
| கட்டுவன மேற்கு | 239 |
| தென் மயிலை | 240 |
| வறுத்தலைவிளான் | 241 |
| தையிட்டி கிழக்கு | 247 |
| குரும்பசிட்டி | 242 |
| குரும்பசிட்டி கிழக்கு | 243 |
| பலாலி வடக்கு | 254 |
| பலாலி வட மேற்கு | 255 |
| பலாலி மேற்கு | 256 |
| மயிலிட்டிதுறை தெற்கு | 248 |
| மயிலிட்டிதுறை வடக்கு | 251 |
| தையிட்டி வடக்கு | 249 |
| தையிட்டி தெற்கு | 250 |

காலம்: 01-09-91 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2மணி
இடம்: அளவெட்டி அருணோதயாக் கல்லூரி

கி. சே. பிரிவுகள்

| பெயர் | இல: |
|---|---|
| அளவெட்டி வடக்கு | 215 |
| அளவெட்டி மத்தி | 216 |
| அளவெட்டி தெற்கு | 219 |
| அளவெட்டி மேற்கு | 220 |
| அளவெட்டி கணேஸ்வரம் | 218 |
| அளவெட்டி கிழக்கு | 217 |
| மாவிட்டபுரம் | 231 |
| மாவிட்டபுரம் தெற்கு | 232 |

காலம்: 08-09-91 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி
இடம்: புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி

கி. சே. பிரிவு

| பெயர் | இல: |
|---|---|
| வயாவிளான் கிழக்கு | 244 |
| வயாவிளான் மேற்கு | 245 |
| பலாலி தெற்கு | 252 |
| பலாலி கிழக்கு | 253 |

காலம்: 08-09-91 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2மணி
இடம்-இளவாலை மெய்கண்டான்மகாவித்தியாலயம்

கி. சே. பிரிவு

| பெயர் | இல: |
|---|---|
| இளவாலை வடக்கு | 221 |
| இளவாலை வடமேற்கு | 222 |
| நகுலேஸ்வரம் | 226 |

காலம்: 08-09.91 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணி
இடம்: பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை

கி. சே.பிரிவு

| பெயர் | இல: |
|---|---|
| வித்தகபுரம் | 223 |
| பன்னாலை | 224 |
| கொல்லங்கலட்டி | 225 |

மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு குறித்த நேரத்திற்கு ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவில் சமூக சேவையாளர்கள், நலன் விரும்பிகள், சமூகசேவை நிறுவனங்களின் பிரதிநிதிகள் அனைவரும் சமூகம்தந்து ஒத்துழைப்பு நல்கும்வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

வலி வடக்கு புனர்வாழ்வுக் கழகம்

தெல்லிப்பளை.
27-08-1991 (எ 1535)

## இராசி பலன்

29 - 08 - 1991
வியாழக்கிழமை
தமிழுக்கு ஆவணி 13
சதுர்த்தி பி. ப. 3-12 வரை.
ரேவதி பி. ப. 4-14 வரை.
இராகு காலம் பகல் 1-35 முதல் 3-05 வரை.
சுபநேரம் காலை 7-35 முதல் 9-05 வரை.
சித்தாமிர்தயோகம்.

மேடம்: வசதிமேம்பாடு, இனசன உதவி, விந்தை விருத்தி.

இடபம்: குடும்ப விவகாரம், காரிய விக்கினம், பகை.

மிதுனம்: கடமை உணர்வு, அறிஞர் சந்திப்பு, புகழ்.

கடகம்: வீண்வாதம், பணியாள் தொல்லை, கடன்வரவு.

சிங்கம்: இல்லறசுகம், ஏமாற்றப்படல், மனஉறுதி

கன்னி; அதிகாரிகள் துன்பம், பதட்டம், அமைதிக் குறைவு

துலாம்: தடுமாற்றம், தந்தையர் கேடு. தொழில்லாபம்.

விருச்சிகம்: அடிபணிதல், அவதூறு, கவலைமிகுதி.

தனுசு: அதிகயோசனை, வீண்தொல்லை, மயக்கம்.

மகரம்: கெட்ட உறவு, வைத்திய செலவு, அலைச்சல்.

கும்பம்: சுபகாரியம், விருந்துபசாரம், குடும்ப மகிழ்ச்சி

மீனம்: அஞ்ஞானவாசம், மனக்கசப்பு, வாக்குகலகம்.

- ஜோஸ்யர்

## இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுத் தொடர்பாக 3 பொலிஸ் அதிகாரிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதையடுத்துப் பொலிஸ் படையினருக்கிடையில் பிரச்னை தோன்றியுள்ளது.

கடற்படைத் தளபதியாக உப-தளபதிக்குப் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதைத் தற்போதைய கடற்படைத் தளபதி வன்மையாக எதிர்த்து ஜனாதிபதிக்கு முறையிட்டுள்ளார். இவரது பதவிக் காலம் அக்டோபர் 31-ஆம் திகதி முடிவடைகிறது. புதிய தளபதிக்காகத் தற்போதைய உப தளபதி நவம்பர் முதலாம் திகதி பதவியேற்பாரென ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்துள்ளார். இதனால் கடற்படையினரிடையே பிரச்னை.

இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கவின் பதவிக் காலம் முடிவடைந்தபோதும் அவருக்கு மேலும் 3 மாத காலம் பதவி நீடிக்கப்பட்டுள்ளது. இதனால் அடுத்த தளபதி யார் என்பதில் தற்போது வடக்கு - கிழக்குப் பிராந்தியத் தளபதிகளிடையே போட்டி. தனக்கு எதிராகப் பல விரும்பத்தகாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் ஹமில்டன் வனசிங்க கூறியுள்ளார். இதனால் ராணுவத்திடையே பிரச்னை.

விமானப்படை விமானிகளுக்கும், தொழில் நுட்பப் பிரிவினருக்குமிடையில் பெரும் பிரச்னை நிலவிவருகிறது. அண்மைக் காலத்தில் 5 ஹெலிக்கொப்டர்கள் தொழில் நுட்பக் கோளாறினால் வீழ்ந்து நொருங்கிப் போய்விட்டதாகவும். இதற்குத் தொழில் நுட்பப் பிரிவே காரணமென விமானிகளுக்கும் மேற்படி பிரிவினருக்குமிடையில் பிரச்னை.

இவ்வாறு நான்கு படையினரிடையேயும் உள் வீட்டுப் பிரச்னை நிலவி வருவதாக 'சண்டே ரைம்ஸ்' குறிப்பிட்டுள்ளது. [சி]

# சுமுகநிலை தோன்றியபின்பே வடக்கு-கிழக்கில் அபிவிருத்தி

## அமைச்சர் அதிகாரி

[கொழும்பு]

வடக்கு-கிழக்குப் பகுதிகட்கு ஒதுக்கப்பட்ட வெளிநாட்டு நிதியுதவி அவ்வப்பகுதி அபிவிருததிக்காகவே செலவிடப்படும். அந்தப் பகுதிகளில் அமைதி திரும்பியதும் அபிவிருத்தியை மேற்கொள்ளவும் அந்நிதியைப் பயன்படுத்தவும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர் திரு ஏ எம். எஸ். அதிகாரி பத்திரிகையாளரிடையே பேசும் போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்ட நிதி அந்தப்பகுதி அபிவிருத்திக்கென்றே அடையாளம்காட்டி வழங்கப்பட்டிருப்பதால், வடக்கு கிழக்குப் பகுதி அபிவிருத்திக்கென்று வழங்கப்பட்ட வெளிநாட்டு உதவியை வேறு எந்தப் பகுதிக்கும் செலவிடமுடியாது.

இந்தப் பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட பலகோடி ரூபா நிதியும் கைவசம் உள்ளது என்றார்.

## சமய அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு நலலூர் முருகன் சனசமூக நிலையத்தினர் சமய அறிவுப்போட்டி ஒன்றை நடாத்தவுள்ளனர். இப்போட்டியில் சகலரும் பங்குபற்றலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

போட்டிக்கான முடிவுத் திகதி 10-9-91ஆகும். வெற்றி பெறும்முதல் 15பேருக்குபணப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

உதைபந்தாட்டம்

## காரை விளையாட்டு கழகம் சாம்பியனாக தெரிவு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு 'சண் ஸ்ரார்' விளையாட்டு கழகத்தினர் நடாத்திய 2-ம் லெப். மதி ஞாகார்த்த வெற்றிக் கேடய 7பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் "காரைநகர் விளையாட்டுக் கழகம்" முதலாம் இடத்தை பெற்று கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது.

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் கடந்த 2 மாதங்களாக நடைபெற்று வந்த இப்போட்டியில் 20க்கும் மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றின.

இறுதிப்போட்டியில் காரைநகர் விளையாட்டுக் கழகமும் குருநகர் சென்.ஜூட்ஸ் விளையாட்டுகழகமும் மோதிக் கொண்டன. காரைநகர் விளையாட்டுக் கழக முன்னணி வீரர் க. யுஸ்தீனப்பர் (தாசன்) போட்ட ஒரு கோலின் மூலம் 1-0 என்ற வித்தியாசத்தில் காரை விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. அகஸ்ரின் நடுவராக கடமையாற்றினர். [சி]

விபுலாநந்தர் நூற்றுண்டு விழா

## வரலாறு தொடர்பான ஆவணங்களை வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

விபுலாநந்தர் நூற்றுண்டு விழாவினை ஓராண்டுக்கு தமிழீழம் எங்கும் கொண்டாட தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக கழகம் விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளாரின் நூற்றுண்டு விழாவினை முழுமையாகவும், நிறைவாகவும் கொண்டாட அவரின் வரலாறு தொடர்பான தகவல்கள், அவரது எழுத்துக்கள் (கடிதங்கள், கட்டுரைகள், நூல்கள்) என்பவற்றை ஒருங்கு சேர்க்க வேண்டிய இன்றியமையாத புலமைத் தேவை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய ஆவணங்களை வைத்திருப்போர் அவற்றைத் தந்துதவுமாறு வேண்டுகின்றோம். தந்துதவுவோர்களின் பெயர்கள் உரிய வகையில் நன்றியுடன் வெளிப்படுத்தப்படும். ஆவணங்களை நாம் படியெடுத்த பின்னர் உரியவர்களுக்கு மீளக்கையளிப்போம. இவ்வாறு தந்துதவுவோர் அடிகளார் பற்றிய அறிவார்ந்த அம்சங்களையும், பணிகளையும் தமிழ்கூறும் நல்லுலகம் பரவலாக அறிந்து கொள்ள உதவுகின்றனர் என்பதையும் அறியத் தருகின்றோம்.

### இனப் பிரச்னைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொள்ளும் விதத்தில் இலங்கையின் ஒருமைப்பாட்டின் கீழ் நல்லதொரு தீர்வைக் காணச் சகல தரப்பினரும் முன்வரவேண்டும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கோரியுள்ளது. (சி)

### புலிகளுக்கு எதிராக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கேரளம், கர்நாடகத்தில் மிகத் தீவிரமாக செயற்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புலிகளின் நடவடிக்கைக்கு எதிராக மாநில அரசுக்கு ஏற்பட்டுள்ள செலவை ஈடுகட்டுவது குறுத்து மத்திய அரசு பரிசிலித்துவருகிறது. (க)

### புகைக்கூண்டை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வானில் பறக்க விடப்பட்ட பெரிய புகைக்கூண்டு அதிக உயரத்தில் வெளிச்சத்துடன் பறந்து கொண்டிருந்தபோது வல்வைக்கடலில் தரித்து நின்ற ஸ்ரீலங்காகடற்படையினர் அதை நோக்கி சரமாரியான வேட்டுக்களைத் தீர்த்தவர்.

ஆயினும் அப்புகைக்கூண்டு எவ்வித சேதமும் இன்றி அதி உயரம் பறந்து சென்றது. (51)

### வல்வைக் கடலில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குதல் மேற்கொள்ளப்பட்டது.

இவற்றல் உயிர்ச்சேதம் ஏற்படாத போதும் பெரும் பதற்றம் ஏற்பட்டது. [51]

### இந்திய - பாக்.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களும் நேற்றுக் கொல்லப்பட்டதாகவும் 3 நாள் யுத்தத்தில் 50-க்கும் மேற்பட்ட படையினர் இரு தரப்பிலும் கொல்லப்பட்டதாகவும் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' தெரிவித்தது.

பாகிஸ்தான் படைகள் இந்திய நிலைகள் மீது கடும் மோட்டார், ரொக்கட் தாக்குதலை நடாத்தியதாகவும் 'வி. ஒ. ஏ.' தெரிவித்தது. (வி-சி)

### கைதிகளின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் தலைமை வகிக்கும் இக்குழு கைதிகளின் நலன்கள் குறித்து சகல மட்டத்திலும் ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமென அரச சார்பில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. (க)

## குளம் புனரமைப்பு

[சித்தன்கேணி]

பொன்னாலைக்குளம் தற்போது சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் புனரமைக்கப்படுகிறது. (137)


ஓம்

நினைவஞ்சலி



பத்மநாதன் சேதுநாதன்

பிறப்பு:
08-02-1965

இறப்பு:
20-05-1990

சவூதியில் அகாலமரணம் அடைந்தார். இவரின் ஆத்மசாந்திக்கு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

சமரபாகு
இலக்கணவத்தை,
உடுப்பிட்டி.

45ஆம் நாள்

நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மேஜர் கோபு / ரதீஸ்
(பத்மநாதன் கோபுநாதன்)

வீர ஜனனம்: 04-04-1970
வீர மரணம்: 17-07-1991

ஆனையிறவு இராணுவமுகாம் நேரடி மோதலில் வீரமரணமடைந்தார். இவரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் அனைவரையும்

(30 08 1991) வெள்ளியன்று கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
பத்மநாதன் குடும்பத்தினர்.
(சி5218)

★ எவ்-5, எவ்-7

# சீன யுத்த விமானங்களின் தாக்கம் பெரிதாக இராது

## ஐரோப்பாவில் புலிகள் தகவல்

(சென்னை)

"சீனவிடமிருந்து அரசு பெற்றுள்ள எவ்-5, எவ்-7 யுத்த விமானங்களிடையே பெருமளவு வித்தியாசமில்லை. இவையும் 1,500 மீற்றர் உயரத்திற்கு மேலேயே பறக்கவேண்டும். இதனால் இவற்றின தாக்கமும் மிகக்கடுமையாக இருக்குமெனக் கூறுவதற்கில்லை".

இவ்வாறு ஐரோப்பாவிலுள்ள புலிகள் வட்டாரங்கள் தெரிவித்ததாக 'புரன்ட்லைன்" சஞ்சிகை தனது ஆகஸ்ட் 16-ம் திகதி வெளியீட்டில் குறிப்பிட்டுள்ளது.

அச்சஞ்சிகை மேலும் தெரிவிக்கையில்; இராணுவமுகாம்களிலிருந்து 60 முதல் 75 மீற்றர் தூரத்தில் சென்று புலிகள் முகாமை முற்றுகையிடுவதால் சீனவிலிருந்து அரசு பெற்றுள்ள நீண்டதூர ஆட்லறி ஷெல்லும புலிகளை பாதிக்காது என்று அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை 1990-ல் மீண்டும் போர் ஆரம்பமான பின் புலிகள் தற்போது மிகவும் பலம்வாய்ந்த நிலையிலிருப்பதுடன் அவர்களிடையே 'ஈழக்கொள்கைக்கான' உறுதியும் மிகவும் வலுப்பெற்றுள்ளதாகவும் 'புரன்ட்லைன்' கூறியுள்ளது. (சி)

## திருமலையில் தொடர்ந்து சிங்களக் குடியேற்றம்

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சிங்களக்குடியேற்றம் மிக வேகமாக நடைபெற்று வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிகின்றன.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிராமப்புறங்களிலும், கடற்கரைப் பகுதிகளிலும் சிங்களக் குடியேற்றம் நாளுக்குநாள் பெருகியவண்ணமிருப்பதாகவும், இவ்விடங்களிலிருந்த தமிழ் மக்களை இராணுவத்தினர் விரட்டிக்கலைத்துவிட்டு. சிங்கள மக்களைக்குடியேற்றி பின்பு அப்பகுதிகளைச் சுற்றி காவல் புரிந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

திருமலை மாவட்டத்தில் தற்போது 42 வீதம் சிங்களவரும் 58 வீதம் தமிழரும், முஸ்லீம்களும் இருப்பதாகவும் புள்ளி விபரங்கள் தெரிவக்கின்றன- (வி)

## பதவி வெற்றிடங்கள்

நிதர்சனம் நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தகவல் சேகரிப்பாளர்கள்
2. தகவல் அலுவலர்கள்
3. செய்தியாளர்கள்
4. நிகழ்ச்சி மதிப்பீட்டாளர்கள்
5. அறிவிப்பாளர்கள்
6. விளம்பரம் சேகரிப்பாளர்கள்

அனுபவம், திறமை என்பவற்றிற்கேற்ப தகுந்த வேதனம் வழங்கப்படும்.

சுய விபரங்களுடன் 1991-09-05 இற்கு முன் தொடர்புகொள்க.

"நிதர்சனம்"

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

குறிப்பு: மேலதிக விபரங்களை நிதர்சனம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(ஏ 1537)

மனித உரிமை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்பான புகைப்படங்களை ஆகஸ்ட்மாகம் வெளியான சர்வதேச மன்னிப்புச்சபையின் 'செய்திக் கடிதம்' பிரசுரித்துள்ளது. [சி]

## யாழ். பல்கலைக்கழக விரிவுரைகளை ஆரம்பிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழக 1990/91 ஆம் கல்வி ஆண்டு புதிய மாணவர்களுக்குரிய விரிவுரைகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவ பீட மாணவர்களுக்கு செப்டம்பர் 30 திகதியும், பௌதிகவியல் கலைப்பீட மாணவர்களுக்கு நவம்பர் 4-ம் திகதியும் விவசாய பீட மாணவர்க்கு டிசம்பர் 4-ம் திகதியும் விரிவுரைகள் ஆரம்பமாக விருப்பதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பூ)

## ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க ஆசிரியர், மாணவ, கிராமிய, கொத்தணி தொடர்பாளர்கள் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நாளை காலை 10-00 மணிக்கு நடைபெறும்.

## வீரமரணம்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் நேற்று இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் நான்கு வீரவேங்கைகள் வீரமரணமடைந்தனர்

லெப். ஸ்ரீநாத் (மயில்வாகனம் திருச்செல்வம் - செல்வநாயகபுரம்), 2-ம் லெப் பீற்றர் [ஆறுமுகம் பகவத்சிங் பன்குளம்], சுதா (செபமாலை ஜெகதீஸ்வரன் - கன்னியா), ஸ்ரீமனோ [கணபதிப்பிள்ளை ராஜன் - திருஞானசம்பந்தர் வீதி, திருமலை) ஆகிய வீரவேங்கைகள் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். [வி)

## கே. ஜி. பி. கலைக்கப்பட்டது

(மாஸ்கோ)

சோவியத் யூனியனின் மிகப்பெரிய உளவுஸ்தாபனமான கே. ஜி. பி யை ஜனாதிபதி கொர்பச்சேவ் நேற்று கலைத்துள்ளார்

மேற்படி ஸ்தாபனம் அண்மையில் நடைபெற்ற சதிப்புரட்சிக்கு உடந்தையாக இருந்தது, என ஜனாதிபதி கொர்பச்சேவ் தெரிவித்தார்.

## உப்பு உற்பத்தி வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளினால் ஆனையிறவு உப்பளம் மூடப்பட்டதினால் வருடாந்தம் 60 ஆயிரம் தொன் உப்பு உற்பத்தி பாதிப்படைந்துள்ளதாக இலங்கை உப்புக் கூட்டுத்தாபனம் நேற்று கொழும்பில் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. [வி)

## இலங்கை அணி தோல்வி

[லண்டன்]

லோட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையே நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில் இங்கிலாந்து 137 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

ஸ்கோர் விபரம்: இங்கிலாந்து முதல் இன்னிங்ஸ் 282: 2-வது இன்னிங்ஸ் 3 விக்கட் இழப்பிற்கு 364.

இலங்கை அணி 1-வது இன்னிங்ஸ் 224. 2-வது இனிங்ஸ் 285. (பூ)

புலிகள் தாக்குதல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது; இராணுவத்தினர் பலர் பலத்த காயமடைந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் இரண்டு மணித்தியாலங்களாக மோதல்கள் இடம் பெற்றதென்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பாதையில் வழமையாக காலைவேளையில் இராணுவத்தினர் ரோந்துப்பணியில் ஈடுபட்டு பாதைகளைப் பரிசோதித்த பின்னர் காலை 10 மணிக்குப் பின்னரே பாதையில் வாகனங்களை அனுமதிப்பது குறிப்பிடத்தக்கது (153)

## வீர அஞ்சலி செலுத்துகிறோம்




★★ ★★

கட்டைக் காட்டில்

வீர மரணம்

★★ ★★



**மேஜர் லவன்**

(துரைசிங்கம் ராஜ்சங்கர்)

கொழும்பு.

வீர ஜனனம்: 21-04-1968

வீர மரணம்: 14-07-1991

நெஞ்சினில் வீர நெருப்பினை ஏந்தி
நின்றவன் "லவன்" எனும் வீரன்
அஞ்சிடல் அற்று ஆயிரம் களத்தில்
ஆடினன் "லவன்" எனும் வேங்கை
நஞ்சினைக் கட்டி எதிரியைக் களத்தில்
நடுங்கிடச் செய்தும் இவனே,
மிஞ்சிய லவனின் பணியினை நாங்கள்
முடித்திடச் சபதமொன் றெடுப்போம்.

★★★★
★★★★

**மேஜர் சேரன்**

(சண்முகம் ரேய் செழியன்)

கொழும்பு.

வீர ஜனனம்: 16-11-1969

வீர மரணம்: 21-07-1991

சிங்கள மண்ணில் தோன்றிய வேங்கை
"தினேஷ்" சுடன் நிழலென திரிந்தோன்
வெந்திடும் தமிழர் வேதனை தீர
விரும்பிய விடுதலை வீரன்
பொங்கிடும் கடலாய் புயலிடி மழையாய்
போர்க்களம் ஆடிய வேங்கை
செந்தமிழீழத் திசையெலாம் வீசும்
தென்றலே! "சேரனை"ப் பாடு!!

(ஏ 1533) -- வேதனையுறும் நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா செல்லம்மா

சுன்னாகம் திருமதி கந்தையா செல்லம்மா காலமானார். அன்னார் கந்தையாவின் அன்புமனைவியும், காலஞ்சென்ற திருமதி இராசையா நாகேஸ்வரி, சிவசுப்பிரமணியம் (இலங்கை வங்கி, கொழும்பு), சிவஞானராசா (ஞானம் பார்மஸி, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராசையா. சந்திரவதனா, இராசகுணேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், சிவஞானலிங்கத்தின் ஒன்றுவிட்ட சகோதரியும், றஜிபாலினி, ராஜ்பவன் (U. K.), ராஜ்ரூபன் ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29-08-91 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு டாக்டர் சுப்பிரமணியம் வீதி சுன்னாகத்திலுள்ள வீட்டில் நடைபெற்று தகனக்கிரியைக்காக சுன்னாகம் இந்து மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:

க. சிவஞானராசா.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி.

சுன்னாகம். (சி-5224)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Srl Lanka under Licence Number B/10336/81,